**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044322

1. District மாவட்டம்: Kanchipuram PS காவல்நிலையம்: VPAC/Kanchipuram Year ஆண்டு: 2021 FIR No.: மு.த.அ. எண்: 8/AC/2021/KM Date: நாள்: 19.08.2021 at 12.00 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (Amended in 2018) Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/s 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.07.2021 at Date to : நாள் வரை 13.08.2021 at
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 02.45 PM Time to : நேரம் வரை 02.00 PM.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.08.2021 Time : நேரம் 11.30 h.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.08.2021 Time : நேரம் 12.00 h.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North-East / 18 km.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Taluk, Walajabad, Kanchipuram District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D.D. Saravanan (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் K. Devarajan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 40 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி No. 4/351, Vinayagar Koil Street, Vedal village, Melperamanallur post, Walajabad Taluk, Kanchipuram Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Indhumathi, Surveyor, Firka Magaral, Walajabad Taluk, Kanchipuram District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
by complainant

Seen [illegible] 19/8/2021

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 10,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Attached here with enclosed Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. Geetha Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS Inspector of police. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 19/08/2021 | R. [signature] 19/08/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
× 19/08/2021 at 15.30hrs.

Name: பெயர் R. Geetha
Rank: நிலை Inspector of police. No. எண் ........
VPAC / Kanchipuram.

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2021/KM U/s. 7 of the Prevention of Corruption Act-1988 as Amended in 2018 continues.....)**

பணிந்து அனுப்பப்படுகிறது: இன்று 19.08.2021-ந் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது, வாலாஜாபாத், வேடல் கிராமத்தைச் சேர்ந்த திரு.D.D.சரவணன், வயது-40, த/பெ. தேவராஜன் என்பவர் அலுவலகம் ஆஜராகி என்னிடம் எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் சாராம்சம் வருமாறு. அனுப்புநர் D.D.சரவணன், வயது-40, த்/பெ.K.தேவராஜன், எண். 4/351, விநாயகர் கோயில் தெரு, வேடல் கிராமம், மேல்பேரமநல்லூர் அஞ்சல், வாலாஜாபாத் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, காஞ்சிபுரம் ஐயா, நான் எனது குடும்பத்தாருடன் வாலாஜாபாத் வட்டம், வேடல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் B.B.M படிப்பினை முடித்துவிட்டு, வெலாசிட்டி கம்பெனியின் எஞ்சின் ஆயில் பிசினஸ் 15 மாவட்டங்களில் செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு பெண் பிள்ளை இருக்கிறாள். என்னுடன் பிறந்தவர்களில் வெங்கடேசன் மற்றும் நாகராஜன் என்ற இரண்டு தம்பிகள் உள்ளனர். என் தாத்தா திரு.கண்ணனப்ப நாயுடு அவர்கள் பெயரில் எங்கள் ஊரில் சுமார் 1.79 செண்ட் நிலம் உள்ளது. அதனை என் தாத்தா கடந்த 05.06.2007-ந்தேதி காஞ்சிபுரம் இணை-2 சார்பதிவாளர் அலுவலகத்தில் அவரது பேரன்களான எங்கள் மூவரின் பெயரிலும் செட்டில் மெண்ட் ஆவண எண். 4347/2007 மூலம் பத்திரப்பதிவு செய்து கொடுத்தார். அதனால், எங்கள் மூவரின் பெயரிலும் கூட்டுப்பட்டா எண். 223-வாக மாறியது. அதிலிருந்து கடந்த 10.09.2012-ந்தேதி எங்கள் இளைய தம்பி திரு.நாகராஜன் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வேடல் கிராம சர்வே எண்.159/2ஏ மூலம் 1320 சதுரடி நிலத்தை நானும், என் மூத்த தம்பி திரு.வெங்கடேசனும் பாக பாத்திய அக்குவிடுதலைப்பத்திரம் எண்.6082/2012-ன் மூலம் பதிவு செய்து கொடுத்தோம். அதில் அவர் வீடு கட்டிக்கொண்டார். அதேபோல், என் சிறிய தம்பி நாகராஜிக்கு, நானும், என் மற்றொரு தம்பி வெங்கடேசனும் சேர்ந்து 26.10.2016 ந் தேதி, வேடல் கிராம சர்வே எண்.159/2ஏ-ல் 11,400 சதுரடியில் தம்பி பாகத்தினை, பாக பாத்திய அக்கு விடுதலைப்பத்திர எண்.5493/2016-ன் மூலம் இணை-2 சார்பதிவாளர் காஞ்சிபுரம் அலுவலகத்தில் எழுதி பத்திரப் பதிவு செய்து கொடுத்தோம். பின்னர் கடந்த 26.10.2016-ந்தேதி, எனக்கு மற்ற இரண்டு தம்பிகளும் சேர்ந்து பாக பாத்திய அக்கு விடுதலைப்பத்திர எண்.5494/2016-ன் மூலம் வேடல் கிராம சர்வே எண்.80/1இ-ல் 0.34 செண்ட் மற்றும் சர்வே எண்.159/2ஏ-ல் 7950 சதுரடி நிலங்களையும் எனது பெயருக்கு எழுதி கொடுத்தனர். மேற்குறிப்பிட்ட 3 ஆவணங்களுக்கான சொத்துக்களை அவரவர்கள்

**(FIR contents, continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2021/KM U/s. 7 of the Prevention of Corruption Act-1988 as Amended in 2018 continues.....)**

பெயரில் தனித்தனியாக பட்டா பெயர் மாற்றம் செய்துக்கொள்ள கடந்த 11.11.2019-ந்தேதி என் பெயரில் ஆன் லைனில் மனு எண்-2019/0105/03/256854-ம், அடுத்த நாள் 12.11.2019-ந்தேதி என் தம்பி நாகராஜன் பெயரில் இரண்டு மனுக்களாக மனு எண்கள்-2019/0105/03/257336 (வீட்டிற்காகவும்) மற்றும் 2019/0105/03/257350 (நிலத்திற்காகவும்), ஒவ்வொன்றிற்கும் ரூ.60/- செலுத்தி, அனைத்து ஆவணங்களையும் நகல்கள் இணைத்து மனுக்களை தாசில்தார் வாலாஜாபாத் அவர்களுக்கு ஆன்லைனில் மனு செய்தேன். அது தொடர்பாக டிசம்பர்/2019-ல் வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகம் சென்று விசாரித்தபோது எங்கள் ஊருக்கான மாகரல் பிர்கா சர்வேயர் திருமதி.இந்துமதி என தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து அவரை அலுவலகத்தில் சென்று பார்த்தபோது, அவர் மனுவில் குறிப்பிட்ட நிலத்தினை நேரில் வந்து பார்வையிட வருவதாக தெரிவித்துவிட்டு, என் செல்போன் எண்ணை பெற்றுக்கொண்டு அவரது செல்போன் எண்ணையும் கொடுத்தார். அதன் பின் ஒரு நாள் டிசம்பர்/2019 மாதத்திலேயே எங்கள் நிலத்திற்கு வந்து பார்த்து அளந்துவிட்டு எல்லாம் சரியாகத்தான் இருக்கு என கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பின் பலமுறை நான் அவரது அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திருமதி.இந்துமதியை பார்த்தேன். அதற்கு அவர் வேலையை முடித்துவிடலாம் என்று நாட்களை கடத்தி வந்தார். மேலும், கொரோனா லாக்டவுன் என்பதால், என்னால் போக முடியாமல் இடைவெளி அதிகமானது. அதன் பின்னர் கடந்த 23.07.2021 ந் தேதி மதியம் 2.45 மணியளவில் திருமதி.இந்துமதி சர்வேயர் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து எனக்கும் என் தம்பி நாகராஜ் ஆகிய இருவரின் பட்டா குறித்து கேட்டபோது, அப்போது சர்வேயர் திருமதி.இந்துமதி அவர்கள் பட்டா தயார் செய்ய ரூ.20,000/-ம் செலவாகும் என்றும் பணம் தந்தால் தான் வேலையை முடிப்பேன் என்று கறாராக தெரிவித்தார். அதன்பின் மீண்டும் கடந்த 13.08.2021-ந்தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு நான், சர்வேயர் திருமதி.இந்துமதி அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து, என் நிலைமையை கூறியதற்கு, திருமதி.இந்துமதி அவர்கள், முதலில் ரூ.10,000/-த்தை கொண்டு வந்து 19.08.2021 தேதி எனது அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறும் மீதி பணம் ரூ.10,000/-த்தை பட்டா பெற்றுக்கொள்ளும்போது கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். பின்னர் சர்வேயர் அவருக்கு உதவியாக இருக்கும் திரு.சுதன் என்பவரை அழைத்து, என்னிடம் அறிமுகம் செய்துவிட்டு, என் பட்டா சம்மந்தமான வேலையை தயார் செய்யுமாறு தெரிவித்தார். நான் வந்து விட்டேன். இது சம்மந்தமாக எனது தம்பி நாகராஜனிடம் சர்வேயர் திருமதி.இந்துமதி என்பவர் லஞ்சமாக ரூ.10,000/-த்தை முதல் தவணையாக கொடுக்க வேண்டும் என்று தெரிவித்ததை கூறினேன். எனக்கும் என் தம்பிக்கும்

**(FIR contents, continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.8/AC/2021/KM U/s. 7 of the Prevention of Corruption Act-1988 as Amended in 2018 continues.....)**

சர்வேயர் திருமதி.இந்துமதிக்கு லஞ்சப் பணம் கொடுக்க விருப்பம் இல்லை. என் தம்பி திரு.நாகராஜ் என்னிடம் லஞ்சம் கேட்ட சர்வேயர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுக்க தெரிவித்தார். அதன்படி நான் இன்று 19.08.2021 ந் தேதி காலை 11.30 மணிக்கு பட்டா வழங்குவதற்கு என்னிடம் முதல் தவணையாக லஞ்சப் பணம் ரூ.10,000/-ம் கேட்ட மாகரல் பிர்கா சர்வேயர் திருமதி.இந்துமதி அவர்களின் மீது எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி அவர்கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/-த்துடன் புகார் மனு அளிக்கிறேன். மேலும் சர்வேயர் திருமதி.இந்துமதி என்பவர் மீது தாங்கள் எடுக்கும் சட்டபடியான நடவடிக்கைக்கு என்னுடைய முழு ஒத்துழைப்பையும் தருவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, XXXX Sd (D.D.சரவணன்), 19.08.2021.

**Honoured Mam,**

Received the above complaint on 19.08.2021 at about 11.30 hrs and after making a preliminary enquiry, about the genuineness of the complaint, the reputation of the accused and any enmity between the complainant and accused is verified in a discreet manner, hence, the prima facie made out to register a case in Kanchipuram V&AC Cr.No.8/AC/2021/KM u/s. 7 of the Prevention of Corruption Act-1988 as Amended in 2018 is registered against the accused on 19.08.2021 at 12.00 hrs.

**(R.GEETHA)**, 19/08/2021.
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Kanchipuram.

This FIR is registered on 19.08.2021 at 12.00 hrs in Kanchipuram V&AC Cr.No.08/AC/2021/KM u/s. 7 of the Prevention of Corruption Act-1988 as Amended in 2018 against the accused Tmt.Indumathi, Surveyor, Magaral Firka, Walajabad Taluk, Kanchipuram District and took up action.

19/8/2021.
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501